# மொழியியல் நோக்கில் திபெத்திய இலக்கணங்களில் தொல்காப்பிய எழுத்தியல் கூறுகள்

**மு. ஜோதிலட்சுமி / M.Jothi letchumi***
தமிழாய்வுத்துறை / Department of Tamil
பிஷப் ஹீபர் கல்லூரி / Bishop Heepar College
lec.jothilakshmi@gmail.com

Manuscript received 15 April 2021
Manuscript accepted 30 May 2021
*Corresponding author / First Author

## Abstract
World languages somehow share some common features. Linguist name them as universal grammatical laws. The very same features of a language could be seen in other languages as well. Likewise, there were some notable features could be seen shared by one of the classical languages, Tamil and Tibetian language. Besides studying the way of living of the Tibetan people, the paper also explore the resemblances between the languages, especially the basis of the phonetics of the Tibetan and Tamil languages as underlined by the oldest grammatical treatise that could be seen in Tamil, the Tholkappiyam. The author has tried to establish the similarities between these languages, by considering the historical references and from the literature.

**Keywords**: Tibetan grammars, Tholkappiyam grammar, literary elements, Historical references, Linguistics.

### ஆய்வுச்சுருக்கம்
உலக மொழி இலக்கணங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும், தமிழ் இலக்கணத்தின் மற்றொரு பரிணாமத்தையும், ஆராய வேண்டும் என்ற முயற்சியே இக்கட்டுரையின் நோக்கமாகும். திபெத் மக்களின் வாழ்வியல் பற்றியும், திபெத்திய இலக்கணங்களின் எழுத்தியல் கூறுகள் பற்றியும், தொல்காப்பிய இலக்கணத்தின் எழுத்தியல் கூறுகள் பற்றியும், இவை இரண்டுக்கும் இடையே உள்ள ஒற்றுமை குறித்தும், சான்றுகளுடன் ஆராய்ந்து அறியவும் இக்கட்டுரை முற்படுகின்றது. மேலும், தொல்காப்பிய இலக்கணத்தின் முன்னைய மரபு குறித்தும், அந்த மரபின் நீட்சியே திபெத்திய இலக்கணம் தோன்றுவதற்கான தோற்றுவாய் என்பது குறித்தும், வரலாற்றுச் சான்றுகள் வழியும், எழுத்தியல் கூறுகள் வழியும், மொழியியல் நோக்கில் நிரூபிக்க முற்படுவதே இக்கட்டுரையின் கருதுகோள் ஆகும்.

**குறிப்புச் சொற்கள்**: திபெத்திய இலக்கணம், தொல்காப்பிய இலக்கணம், வாழ்வியல், எழுத்தியல், வரலாற்றுச்சான்றுகள், மொழியியல்

### முன்னுரை
உலக மொழி இலக்கணங்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை ஆராய வேண்டும் என்ற அவாவின், முதல் முயற்சி இக்கட்டுரை ஆகும். திபெத் இலக்கணம் மற்றும் தொல்காப்பிய இலக்கணத்தில் ஒன்றுபட்ட மற்றும் வேறுபட்ட எழுத்தியல் கூறுகளை, உச்சரிப்பு ஒலியியல் அடிப்படையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திபெத் மக்களின் வாழ்வியல்**

இந்தியாவின் வடக்கிலும் சீனாவின் மேற்கிலும் உள்ள பள்ளத்தாக்குகள் நிறைந்த பீடபூமி திபெத் ஆகும். இந்த நாடு, கடல் மட்டத்திற்கு மேல் 5 ஆயிரம் மீட்டர் உயரத்தில் உள்ளது. கிபி ஏழாம் நூற்றாண்டில் இருந்து, இப்பகுதியில் மக்கள் குடியேறியுள்ளனர். உலகின் கூரை என்று அழைக்கப்படும் இந்த நாட்டில் இன்று வரை விமானங்கள் உயரே பறக்க இயலாது. இதனை 'Air traffic' பகுதி என்று அழைக்கின்றனர்.

இந்த பகுதியில் வாழும் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை 25 இலட்சம் ஆகும். இவர்கள் புத்த மதத்தைப் பின்பற்றி தலாய்லாமாக்களைத் தன்குருவாக ஏற்கின்றனர். இங்கு வாழும் மக்களிடையே சோதிட நம்பிக்கை அதிகம். 1959 இல், சீனா இவர்களைத் தன்கட்டுப்பாட்டில் வைக்க போர் செய்தது. அன்றிலிருந்து இன்றுவரை சீனாவிற்கும் திபெத்திற்கும் இடையே அதிகாரப் போர் நடந்து கொண்டே இருக்கின்றது. மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகப் புலம்பெயர்பவர்களாகச் சிலரும், அங்கிருந்தே போராடுபவர்களாக சிலரும் வாழ்கின்றனர். புத்த மதம் வட இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்த பொழுது, பாலி மொழியின் செல்வாக்கும் மிகுந்திருந்தது. இத்தகு சிறப்புமிகு திபெத்திய மக்களின் எழுத்து இலக்கணக் கூறுகளைத் தொல்காப்பிய எழுத்து இலக்கணக் கூறுகளுடன் இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

**வரலாற்றுச் சான்றுகள் வழி தமிழர்-திபெத்திய வாழ்வியல்.**

தமிழகத்தில் இருந்து சென்ற புத்தத்துறவிகள் வழியே திபெத் இலக்கணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். பௌத்த சமயமும் பாலிமொழியும் வடஇந்தியப் பேரரசுகள் மூலமாகவும், தென்இந்திய பேரரசுகள் மூலமாகவும் தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பரவின, தமிழகத்தில் பல்லவப் பேரரசுக்கும், சோழப் பேரரசுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு. கடாரத்தை ஆண்ட சூளாமணிவர்மன் என்பவர் முதலாம் ராஜராஜனின் இசைவுடன் நாகப்பட்டினத்தில் பௌத்தவிகாரை ஒன்றைக் கட்டத்துவங்கினான். இவ்விகாரை இவனுடைய மகன் விஜய துங்கவர்மனால் கட்டி முடிக்கப்பட்டது. இப்பள்ளிக்கு இராசராசன் மகனான, முதலாம் ராஜேந்திரன் பள்ளிச் சந்தமாக, 8943 கலம்நெல் வருவாய் உள்ள, ஒன்பது வேலி நிலப்பரப்பு உடைய ஆனைமங்கலம் என்ற ஊரை வழங்கினான். இவ்விகாரை, "சூளா மணிவிகாரை" மற்றும் "ராஜராஜ பெரும்பள்ளி" என்னும் பெயர்களால் பிற்காலத்தில் விளங்கப் பட்டுள்ளது (இராசாராம், 2010, பக்.210).

பௌத்தப்பிக்குகள் இவ்விகாரையில் இருந்து இலங்கை, கடாரம் போன்ற நாடுகளுக்குச் சென்று பௌத்த சமயத்தையும் பாலிமொழியையும் பரப்பியுள்ளனர். இப்பிக்குகளால் தமிழிலும் சிங்களத்திலும், பாலிமொழிச் சொற்கள் இடம்பெற்றன. பௌத்த சமயத்தைச் சேர்ந்த தேரர்கள் தம்குழுவை இனம் காணும் வகையில் இம்மொழியைத் தமக்குள் கருத்துப் பரிமாற்றத்திற்காக, பயன்படுத்தி வந்துள்ளனர். தமிழகத்தில் பௌத்தப் பள்ளிகளில் உள்ள கூடங்களில் மகாதேரர்கள் பாலிமொழிவழியே பௌத்தசமயக் கொள்கைகளையும் கற்பித்து வந்துள்ளனர். “மலேசியா-பர்மா (இன்றைய மியான்மார்) இந்தோனேஷியா, தாய்லாந்து, வியட்நாம், சீனா முதலிய நாடுகளில் வணிகத் தொடர்பு இருந்ததாகவும் பலர் அந்தந்த நாடுகளில் திருமணம், பொருளாதாரம் போன்ற காரணங்களால் குடியேறியதாகவும் அறிகிறோம். ராஜராஜன், ராஜேந்திரன் போன்ற தமிழ் மன்னர்களின் காலத்தில் படையெடுப்புகள் நடந்ததையும், தங்கள் ஆட்சியின்கீழ் இந்நாடுகளை அவர்கள் கொண்டு வந்ததையும் நாமறிவோம். இவ்வாறு குடியேறிய காலக்கட்டத்தில் பல நன்மைகள் விளைந்திருக்கின்றன. வாய்மொழிகளாகவே இருந்த பாலினிய மொழி, தாய், பர்மிய, சிங்கள மொழிகளுக்கு, கிரந்த எழுத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மன்னர்கள் வரிவடிவம் அளித்தது. அம்மொழிகளில் எழுத்து இலக்கியங்கள் இலக்கணங்கள் வளர வழிவகுத்தது (நடராசபிள்ளை, 2018). இதன்வழி நாம் அறிவது, இங்கு இருந்து சென்ற புத்தமதத் துறவிகளே திபெத்திய இலக்கணம் எழுதி இருக்க வேண்டும்.

**திபெத்திய மொழியின் இலக்கணம்**

கி. பி. 1834 இல் அலெக்சாண்டர்சி. எஸ். ஓ மோடி கோரஸ் மற்றும் டிரன்சிலோவேனியாவின் பகுதியைச் சார்ந்த சிக்குலோஹங்கேரியன் என்பவரும் இணைந்து, 'திபெத்தியமொழியின் இலக்கணம்' என்ற நூலை எழுதி உள்ளார்கள். கல்கத்தா ஞானஸ்நான மிஷன் பிரஸ்ஸால், ஆசிய நாடுகளின்

உதவியுடன் அரசாங்கத்தின் ஆதரவில் இந்நூலை வெளியிட்டுள்ளனர் (***GRAMMAR TIBETAN LANGUAGE Alexander CS. OMA. D KOROS First Edition 1834)***. சான்ஸ், நமோரத்னா, த்ரயாயா என்ற மூன்று புத்ததுறவிகளுக்கு மரியாதை செலுத்திவிட்டு ஆசிரியர் இலக்கணச் செய்திகளைக் கூறியுள்ளார். திபெத்திய மொழியில் "பைகாரானா" என்பது இலக்கணத்தைக் கூறுகிறது. உச்சரிப்பு ஒலியியலில் மிகவும் கடினமானப் பகுதி, "ஆர்த்தோகிராபி" எனவும், அகராதிகள் பற்றிய செய்திகள், "சிலபிக்திட்டம்" என்ற பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளது. புத்தமதத்தினைப் பரப்புவதற்காக, கடிதங்கள், பேச்சின்பாகங்கள், பெயர்ச்சொல், வினைச்சொல், பற்றிய செய்திகள், எண்கள், தொடரியல், போன்ற செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றில் எழுத்தியல் கூறுகள் மட்டுமே, இங்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. 8 வரிசையில் 30 எழுத்துக்களில் இவர்களின் எழுத்தியல் கூறுகள் உச்சரிக்கப்படுகின்றது. தேவநாகரி எழுத்துக்களோடு இதன் வடிவ அமைப்பு ஒத்துள்ளது. உச்சரிப்புத் தன்மை நம் தமிழ் வடிவ ஒலிக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

**முதல்வரிசை**

| | | | |
|---|---|---|---|
| ཀ | ཁ | ག | ང |
| (ka) | (Kha) | (ga) | (ma) |
| க | க்க | ஹ | ம |

முதல் வரிசை குட்டூரல்ஸ் என்று அழைக்கப்படுகிறது. இது குற்றியலுகரம் என்று நாம் குறிக்கும் பொருளைத் தருகிறது.

இதில் " க" என்பது "தூண்" என்றபொருளையும்,

"க்க" என்பது "வாய்" என்றபொருளையும்,

"ஹ" என்பது "என்ன" என்றபொருளையும்,

"ம" என்பது "நான்" என்றபொருளையும் குறித்துவருகிறது.

**இரண்டாம் வரிசை**

| | | | |
|---|---|---|---|
| ཅ | ཆ | ཇ | ཉ |
| (tcha) | (cha) | (ja) | (nya) |
| ஜ | ச்சா | ஜா | ஞா |

இரண்டாம் வரிசை முறையும் குட்டூரல்ஸ் என்று அழைக்கப்படுகிறது. இதில் "ஜ" என்று அழைக்கப்படும் எழுத்து "பொருள்" (Object) என்றும்,

"ச்சா" என்றழைக்கப்படும் எழுத்து "இணை" என்றும்,

"ஜா" என்பது "தேநீர்" என்றும்,

"ஞா" என்பது "மீன்" என்ற பொருளையும் குறித்து வழங்கப்படுகிறது.

### *மூன்றாம் வரிசை*

| | | | |
|---|---|---|---|
| ད | ཐ | ད | ན |
| (dta) | (tha) | (daa) | (na) |
| டா | த | தா | நா |

மூன்றாம் வரிசை முறை அரண்மனைகள் என்று அழைக்கப்படுகிறது.

இதில், "டா" என்பது, "டா" என்ற ஒலியையும்,

"த" என்பது "முடிவு" என்ற பொருளிலும்,

"தா" என்பது "இப்பொழுது" என்ற பொருளிலும்,

"நா" என்பது "அப்படியானால்" என்ற பொருளிலும் வழங்கப்படுகிறது.

### *நான்காம் வரிசை*

| | | | |
|---|---|---|---|
| པ | ཕ | བ | མ |
| (pa) | (pha) | (ba) | (ma) |
| ப | ப்பா | பா | மா |

இந்த வரிசை முறை "பற்கள்" என்று அழைக்கப்படுகிறது.

இதில் "ப" என்பது "ஆண் " என்ற பொருளிலும்,

"ப்பா" என்பது "அப்பா" என்றும்,

"பா" என்பது "பசுவையும்",

"மா" என்பது "அம்மாவையும்" குறிக்கின்றது.

### *ஐந்தாவது வரிசை முறை*

| | | | |
|---|---|---|---|
| ཙ | ཚ | ཛ | ཝ |
| (tsa) | (tsha) | (dza) | (wa) |
| ட்ச | ச்சா | சா | வ |

இந்த வரிசை முறை. "லேபிள்கள்" என்றழைக்கப்படுகிறது.

இதில் "ட்ச" என்ற எழுத்து "வேர்" என்ற பொருளிலும்,

"ச்சா" என்ற எழுத்து "வெப்பம்" என்ற பொருளிலும்,

"சா" என்ற எழுத்து "வெற்றி" என்ற பொருளிலும்,

"வ" என்ற எழுத்து "நரி" என்ற பொருளிலும் அழைக்கப்படுகின்றது.

***ஆறாவது வரிசை முறை***

| | | | |
|---|---|---|---|
| ཞ | ཟ | འ | ཡ |
| (zha) | (za) | (a) | (ya) |
| ஸ்ய | க்ஷ | அ | யா |

இந்த வரிசை முறை "திரவ" என்று அழைக்கப்படுகிறது

"ஸ்ய" என்பது இணைப்புச் சொற்கள் என்ற பொருளிலும், "க்ஷ" என்பது "சாப்பிடு" என்ற பொருளிலும், "அ" என்பது "ஹா" என்ற ஒலியையும், "யா" என்பது "ஒன்று" என்ற எண்ணையும் குறித்து அழைக்கப்படுகின்றது.

***ஏழாவது வரிசை முறை***

| | | | |
|---|---|---|---|
| ར | ལ | ཤ | ས |
| (ra) | (la) | (shya) | (sa) |
| ர | ல | ஷ்யா | க்ஷா |

இந்த வரிசைமுறை "பெருமூளை"என்றுஅழைக்கப்படுகின்றது.

இதில் "ர" என்பது "ஆடு" என்ற பொருளிலும்,

"ல" என்பது "மலையோரம்" என்ற பொருளிலும்,

"ஷ்யா" என்பது "மாமிசம்" என்ற பொருளிலும்,

"க்ஷா" என்பது "பூமி" என்ற பொருளையும் குறித்து வழங்கப்படுகிறது.

***எட்டாவது வரிசை முறை***

| | |
|---|---|
| ཧ | ཨ |
| (ha) | (ah) |
| ஹா | ஆ |

இந்த வரிசை முறை "ஒலிப்புமுறை" என்று அழைக்கப்படுகிறது. இதில் "ஹா" என்பது "ஹா" என்ற ஒலிக்குறிப்பையும், "ஆ" என்பது, "ஆ" என்ற ஒலிக்குறிப்பையும் குறித்து வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள 30 எழுத்துக்களின் வழி, திபெத்திய மக்களின் எழுத்தியல் கூறுகள் அமைகின்றது. தொல்காப்பிய இலக்கணக் கூறுகள் திராவிட மொழிகளில் மட்டுமல்லாமல் பிற இந்திய மொழிகளிலும் ஊடாடியுள்ளன (மதிவாணன், 2019, பக்.2) என்ற கருத்தியலை முன்வைத்து ஆராய்வோமானால், தொல்காப்பியத்திற்கு மூலநூலாக, ஐந்திரனார் இயற்றிய ஐந்திரம் என்ற நூலை முன்வைத்து ஆராய

வேண்டும். காரணம், தொல்காப்பியத்திற்கு சிறப்பு பாயிரம் எழுதிய பனம்பாரனார் குறிப்பிடும் வழி 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என தன் பெயர்த் தோற்றி, பல்புகழ் நிறுத்த படிமையோனே' (தொல்-சிறப்பு பாயிரம் பக்.1) ஐந்திரம் தொல்காப்பிய சிந்தனைக்கு முன்னோடி என்பதையும், என்ம, என்மனார்புலவர் என 147 இடங்களில் தொல்காப்பியர் பயன்படுத்தி உள்ள முந்து நூல் சிந்தனை வழியும் இதனை அறிய இயலும். மேலும், பாலி, பிராகிருதம், திபெத்தியம் ஆகிய, இலக்கணநூல் ஆசிரியர்கள், தாம் ஐந்திர இலக்கணத்தைப் பின்பற்றி உள்ளதாக கூறியுள்ளார்கள் (இராசாராம், 2010, பக்.176).

மேலும், சிந்துவெளி அகழ்வாராய்ச்சி சான்றுகள் உறுதுணையாக நிற்கின்றன. சிந்துவெளி எழுத்தும், தமிழி எழுத்தும் கலந்து கீறல்வடிவில் எழுதப்பட்ட பானைஓடுகள் கொடுமணல் அகழ்வாராய்ச்சியில் மிகுதியாகக் கிடைத்துள்ளன (மதிவாணன், 2019, பக்.4). இவ்விதம் கலந்த சித்திரவடிவில் தான் திபெத்திய எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றின் ஒலிவடிவ உச்சரிப்பு முறை தமிழி எழுத்தின் உச்சரிப்பு முறையுடன் ஒத்துப் போகின்றன. மொழியியலார் ஒலியின் அமைப்பை மூன்று வகையாகப் பிரித்து ஆராய்கின்றனர்.

1) பௌதிகஒலியியல் (acoustic phonetics)

2) கேட்பொலியியல் (auditory phonetics)

3) உச்சரிப்பொலியியல் (articulatory) (தமிழ்மொழிவரலாறு பக்.16)

இந்த அடிப்படையில், உச்சரிப்பு ஒலியியல் நோக்கில், மொழியின் அடிப்படை அலகான எழுத்துகள், ஒலியமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் அறிவியல் அணுகு முறையைச் சார்ந்தது. 'பேச்சு மொழி ஆராய்ச்சியில் முதற்படி ஒலியன்களை வரையறுப்பதுதான்' (எழுத்திலக்கணக் கோட்பாடு பக். 39) மேலும், உலக மொழிகளுக்கிடையே ஒரு பொதுமைப் பண்பு காணப்படுகிறது. மொழியியலார் மனித மொழியின் ஆழ்மனப் புதைவடிவங்களைப் "பொதுமை இலக்கணம்" (Universal Grammar) என்று கூறுவர் (மொழியியல் நோக்கில் ஆய்வியல் சிந்தனைகள், பக்.1).

அந்த வகையில், தொல்காப்பிய எழுத்து இலக்கணக் கூறுகள் 30 ஆகும்.

"எழுத்தெனப்படுப

அகர முதல் னகர விறுவாய்

முப்ப ஃதென்ப சார்ந்து வரல்

மரபின் மூன்ற லங்கடையே " (தொல். எழுத்துநூற்பா. 1)

இதன் அடிப்படையில், திபெத்திய இலக்கணக் கூறுகளும் 30 ஆகும். மேலும், அ. இ, உ, எ, ஒ - "குறில்" (தொ.நூற்-3) எழுத்துக்கள் என்றும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழும் "நெட்டெழுத்துகள்" (தொ.நூற்-4) எனவும் வழங்கப் படுவதைப் போல, குட்டூரல்ஸ், அரண்மனைகள், பற்கள் லேபிள்கள். திரவ மற்றும், பெருமூளைப் பகுதி என திபெத்திய எழுத்துக்கள் பிரித்து வகைப்படுத்தப்படுகின்றன. மேலும், நாம் ஓரெழுத்து ஒரு மொழி என்று பொருள் கூறும் பாங்கில், ஒவ்வொரு எழுத்தும் ஒரு பொருள் தாங்கி நிற்கின்றது. மேலும் நாம், ககர வடிவத்தின் மாற்றுவடிவங்களாக கா, கி, கு, கே. கோ என்று பயன் படுத்துவதைப் போல அவர்களும்,

ཀ (Ka) க

ཀི (Ki) கி

ཀུ (Ku) கு

ཀེ (Ke) கே

ཀོ (Ko) கோ

என்றும் வழங்குகிறார்கள். இந்த முறையில் 30 எழுத்துகளுக்கும் உயிர்மெய் வரிசையாக நீளுகிறது. "உட்பெறு புள்ளி உருவாகும்மே" (தொல். நூற்பா. 14) என்று பகர மெய்க்குத் தொல்காப்பியர் தரும் இலக்கண முறைமையே திபெத்திய இலக்கணங்களின் பகர வடிவத்திற்கும் பின்பற்றப்படுகிறது. நாம் அப்பா என்று அழைக்கும் முறை அவர்கள் "ப்பா" என்று அழைக்கிறார்கள். அவர்களின் எழுத்து உச்சரிப்பு முறை நம் தமிழ் மொழி உச்சரிப்பு முறையைப் பறை சாற்றுகிறது.

சான்றாக,

நான் - I , திபெத்தில் - ང་ (நா)

ஆம் - yes, திபெத்தில் - རེད་ (ரே)

இது எனது - It's me, திபெத்தில் - ང་ རེད་(நாரே)

இல்லை - No/Not, திபெத்தில் - མ་རེད་ (மாரே)

இது என்னுடையது இல்லை - It's not me, திபெத்தில் - ང་མ་རེད་ (நாமாரே)

இருக்கிறது - have, திபெத்தில் - ཡོད་ (யு)

என்னிடம் இருக்கிறது - I have, திபெத்தில் - .ང་ ལ་ ཡོད་ (நாலயு)

இல்லை - don't have, திபெத்தில் - མེད་ (மே)

என்னிடம் இல்லை - I don't have ,திபெத்தில் - ང་ ལ་ མེད (நாலாமே)

இது போன்று இவர்களின் உச்சரிப்பு முறை தமிழ் வடிவ எழுத்துகளுடன் ஒப்பிடத் தகுந்த முறையில் உள்ளது. மேலும் முன்ஒட்டுக்கள் மற்றும் பின்ஒட்டுக்கள் என்று சில எழுத்துக்களை வகைப்படுத்துகின்றனர். இவற்றில், பின்னொட்டுகள் பயன்படுத்தப்படும் வகைப்பாட்டின் அடிப்படையில், மாற்றக் கூடிய உயிர் எழுத்துகளாக ན (நா), ལ (லா) என்ற எழுத்தையும் குறிக்கின்றார்கள். மாற்ற இயலா உயிர் எழுத்தாக, ག(ஹ), ང(ஜா), བ(பா), མ(மா), ར(ர) என்ற எழுத்துக்களைக் குறிக்கின்றார்கள். சில எழுத்துகள் உச்சரிக்க இயலாத நிலையில், ஆனால், பின்னொட்டுகள் என்ற நிலையில் அமைதியாக ஒலிக்கின்றன. அவற்றில் மாறக்கூடிய உயிர்எழுத்தாக, ས(க்ஷா) மாற இயலா உயிர்எழுத்தாக, ཞ(ஸ்ய) என்ற எழுத்தைக் குறிக்கிறார்கள். மேலும், திபெத் எழுத்துக்களில் சொற்கள் வழி இடைவெளிகள் பிரிக்கப்படவில்லை. சிறிய புள்ளியால் மட்டுமே எழுத்துகள் பிரித்துப் பொருள் அறியப்படுகிறது.

சான்றாக:

ཀ།(கான்) இது ஆண்பால் குறித்து வருகிறது.

མ་(மா) இது பெண்பால் குறித்து வருகிறது. மேலும்,

இவர்கள், འ(அ) என்ற எழுத்தை உயர்ந்த மற்றும் குறைந்த தொனியில் உச்சரிக்க முன்ஒட்டுக்களாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழ் மொழியில் ககர வரிசை முழுவதும் (க்+அ) முன்ஒட்டுக்களாக அமைந்து இருந்தாலும் அது அமைதி நிலையில் உள்ளது. வாக்கியத்தின் தன்மைக்கேற்ப நாம் பின்னொட்டுக்களைப் பயன்படுத்துகிறோம். இவர்கள் அ என்ற எழுத்தை உயர்ந்த/குறைந்த தொனியில் பயன்படுத்துவதைப் போல நாம் வல்லின, மெல்லின, இடையின அடிப்படையில் எழுத்துக்களை இடம் சார்ந்து உச்சரிக்கின்றோம். இவ்விதம் தமிழ் ஒலி உச்சரிப்புக் கூறுகள், இலக்கண வகைப்பாடுகள் திபெத்திய எழுத்து இலக்கணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை அறிய இயலுகிறது.

தமிழ் இலக்கணத்தின் மற்றொரு பரிணாம வளர்ச்சியை ஆராய வேண்டுமெனில், உலக இலக்கணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. தொல்காப்பியம் என்பதை தனியொரு நூலாகக் கொள்ளாமல் இது ஒரு சிந்தனைப் பள்ளி என்ற தளத்தில் ஆராய்ந்தால் மட்டுமே, இதன் நெடிய சீர்மிக்க உன்னத மரபு, உலக இலக்கணங்களில் எழுத்தியல் வேர்களில், உச்சரிப்புக் கூறுகளில் ஊடாடியுள்ளதை உணர முடியும். ஆய்வு நோக்கில் சான்றுகளுடன் வெளிக்கொணர இயலும்.

உலக நாடுகளுக்கிடையே தமிழ் மொழியின் தாக்கம் இருந்திருப்பதற்கான மிக முக்கியமான காரணம் போர்ப்படையெடுப்பு, வணிகம், மக்கள் குடியேற்றம், புலம்பெயர்தல் ஆகியவை முதன்மை பங்கு வகித்தாலும் இலக்கணங்களுக் கிடையே ஒரு பொதுமைப் பண்பு காணப்படுகிறது. இது ஆய்ந்து அறிதல் வழியே உணர முடிகிறது. இதனை மொழியியலார் (Universal grammar) என்று அழைக்கின்றார்கள். தமிழ் இலக்கணத்தின் மற்றொரு பரிணாமத்தை ஆராய வேண்டுமெனில், தேராமொகல்யானரின் சத்தலக்கணத்தையும், புத்த மித்திரரின் வீரசோழியத்தையும், திபெத்திய பர்மிய இலக்கணங்களையும் ஒப்பீட்டு ஆராய வேண்டும் என்ற பேராசியர் (**இராசாராம், 2010)** கூற்றை ஆராய்ந்து அறிய எழுந்த அவாவும், உலகெங்கிலும் தமிழர் நாகரீகம் பரந்து விரிந்ததை தொல்லியல் சான்றுகள் மெய்ப்பித்தது உண்மையென்றால், அதன் எச்சங்கள் அந்தந்த மக்களின் இலக்கிய இலக்கண மரபுகளில் ஊடாடி இருத்தலை ஆராய வேண்டும் என்ற நோக்கமே, இக்கட்டுரையின் பயன் ஆகும்.

திபெத்திய இலக்கணக் கூறுகளை ஒப்பிட்டு ஆராய்ந்ததில் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

1) 30 எழுத்துகளாக வகைப்படுத்தும் முறையில் ஒன்றுபடல்
2) தன்மை அடிப்படையில், வல்லின, மெல்லின, இடையின எழுத்துகளாக நாம் வகைப்படுத்துதல் போல, குட்டூரல்ஸ், அரண்மனைகள், பற்கள், லேபிள்கள், திரவ மற்றும் பெருமூளைப் பகுதி என்று பிரித்தல்
3) ஓரெழுத்து ஒரு மொழி போல பொருள் தாங்கி நிற்றல்
4) ககர எழுத்தின் மாறிலிகள் பயன்படுத்தும் முறையில் ஒன்றுபடல்
5) மேல்கொம்பு வடிவத்தை குறில் எழுத்திற்கும், கொம்பு இட்டு, சுழித்து விடுதலை நெடில் எழுத்தாகவும் பயன்படுத்தும் தன்மை
6) உயிர்மெய் எழுத்துகளை உச்சரிப்பின் அடிப்படையில் பிரித்தல்
7) பகரமெய் வடிவம் மாறாமல் பயன்படுத்தல்
8) அப்பா, நான், நா என்று உச்சரிக்கும் தன்மை ஆகிய வற்றில் ஒன்றுபடுதல்
9) முன்ஒட்டுச் சொற்கள், பின்ஒட்டுச் சொற்கள் பயன்படுத்தும் முறையில் ஒன்றுபடல்

10) சொற்களுக்கு இடையே இடைச் சொற்களை உணர்த்த புள்ளிகளே உறுதுணையாக நிற்றல் தன்மையில் மாறுபடல்
11) சோழர்கள் காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட பாலிமொழியின் செல்வாக்கு. இங்கிருந்து சென்ற புத்த மதத்துறவிகளின் வழியே திபெத்திய இலக்கணம் எழுதப்பட்டுள்ளதை வரலாற்று சான்றுகள் வழிமெய்மைப் படுத்தியிருத்தல்

ஆகியவை மேற்கண்ட கட்டுரை வழிபெறப்பட்ட முடிவுகள் ஆகும்.

**துணை நின்ற நூல்கள்:**

KOROS, A. C. D. (1834). *GRAMMAR TIBETAN LANGUAGE*. (First Edition). Calcutta: The Baptist Mission Press.

இராசாராம், சு. (2010). *இலக்கணவியல் மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்*. (முதற்பதிப்பு). நாகர்கோயில்: காலச்சுவடு பதிப்பகம்.

இளம் பூரணர் (உரை). (2005). *தொல்காப்பியம்*. (முதற்பதிப்பு). சென்னை: சாரதா பதிப்பகம்.

சக்திவேல், சு. (2018). *தமிழ் மொழி வரலாறு*. பாரிமுனை, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

சண்முகம், செ. வை. (1980). *எழுத்திலக்கணக் கோட்பாடு*. (முதற்பதிப்பு). அண்ணாமலை நகர்: அனைத்திந்திய தமிழ் மொழியல் கழகம்.

நடராசபிள்ளை, ந. (2018). Contributions of the Tamils to the Writing Systems of South East Asian Countries. *Language in India*, 18(1), 395-413. Retrieved from http://www.languageinindia.com/jan2018/nadarajantamilwritingsystems.pdf

மதிவாணன் , இரா. (2019). *கீழடித்தொன்மை கி.மு.200 வரைநீளும்* (ஆய்வுக் கட்டுரை). தமிழ்நாடு: சிந்துவெளி அகழாய்வு நடுவம்.

ஜோதிலட்சுமி, மு. (2019). *மொழியியல் நோக்கில் ஆய்வியல் சிந்தனைகள்*. (முதற்பதிப்பு). M.J. திருச்சி: பப்ளிகேஷன் ஹவுஸ்.